விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 060 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 05 திங்கட்கிழமை (17.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### தீக்காயத்துக்குள்ளான

## ஆறு மாத கர்ப்பவதியான உதவிப் பிரதேச செயலாளர் மரணம்




(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராகப் பணிபுரிந்த பெண்ணொருவர் தீக்காயத்துக்குள்ளான நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

ஆறு மாத கர்ப்பவதியான குறித்த பெண், கடந்த வெள்ளிக்கிழமை தீக்காயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். 15

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

## பதில் பொதுச் செயலாளராக சுமந்திரன் நியமனம்



(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய பதில் பொதுச் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 15

# அநுர அரசின் பட்ஜெட் இன்று

## நிவாரணங்கள், சம்பள அதிகரிப்பு குறித்து எதிர்பார்ப்பு

(கொழும்பு)

அநுர அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பொதுமக்களுக்கான நிவாரணங்கள், அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக் குறித்து எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## சுமந்திரனை நியமிக்க சிறீதரன் எதிர்ப்பு

(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகச் சுமந்திரனை நியமிக்க சிறீதரன் எம்.பி எதிர்ப்புத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று களுவாஞ்சிக்குடியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற 15

### கட்டுநாயக்கவில்

## யாழ்.இளைஞன் கைது

### கொள்ளையுடன் தொடர்புடையவர்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.ஆரியகுளம் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். 15

## மின்சாரம் தாக்கியதில் 9 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

### வேலணையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் 9 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

வேலணை முதலாம் வட்டாரம் செட்டிபுலம் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சந்திரகாசன் கனிஸ்டன் (வயது-9) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

தொலைக்காட்சி பார்ப்பதற்காக மின் 15

## அரச நிறுவனங்களை தனியார் மயமாக்க முடியாது இலாபமீட்ட முயற்சிகள் மேற்கொள்கின்றோம்

### ஐ.எம்.எப்பிடம் கோரிய அரசாங்கம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் பிரகாரம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் விடயத்தை மாற்றியமைக்க நாணய நிதியத்திடம் கோரியுள்ள அரசாங்கம், அரச நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதற்குச் சாதகமான பதிலை அளித்துள்ள சர்வதேச நாணய நிதியம் இன்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ள அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவு திட்டத்தின் பின்னர் ஒப்பந்தத்தின் முன்னேற்றங்கள் 15

### தொடர் காய்ச்சல்

## யாழில் பெண் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தொடர் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் விடத்தல்பளை, மிருசுவில்பகுதியைச் சேர்ந்த நடராசலிங்கம் 15

### எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

## புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்புடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட முடிவு

### தமிழரசு மத்திய குழுவில் தீர்மானம்

(மட்டக்களப்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் இணக்கப்பாட்டுடன் செயற்பட முடியுமா? எனப் பேச்சுவார்த்தை நடத்துவதென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உள்ளூ 16

### வவுனியாவில்

## இளைஞனின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

26 வயதுடைய தனுசன் என்பவரே 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம்



## பிரதமர் ஹரிணி அமரசூரிய

(யாழ்ப்பாணம்)

**அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (15) நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அரசாங்கம் என்பது மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை உருவாக்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதித்துவமாகும். இத்தனை வருடங்களாக இனங்களுக்கு இடையில் எட்டப்படாதிருக்கும் இன ஐக்கியத்தினை இத்தடவை காண வேண்டும் என்பதே எமது ஒரே நோக்கமாகவுள்ளது.

எமது நாடு பல்வகைமையைக் கொண்டதாகும். அது பரந்துபட்டதாகும். அவ்வாறான நிலையில் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் சிறப்பானதொரு வாழ்க்கையை நாட்டிற்குள் வாழ்வதற்கான சமத்துவ உரிமை காணப்படுகின்றது.

அனைவரும் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் அதே நேரம், அனைவரும் ஒற்றுமையாக வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது.

இலங்கை என்பது எமது வீடு. எமது வீட்டுக்குள் பிரச்சினைகள் உள்ளன. எங்கு தான் பிரச்சினைகள் இல்லை. எமது வீட்டுக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை நாங்கள் தான் தீர்க்க வேண்டும்.

வடக்கில் உள்ள தாயார் ஒருவர் பாடசாலைக்குத் தனது பிள்ளையை அனுப்பும்போது எதிர்காலத்தினை சிந்திப்பது போன்று தான் தென்னிலங்கையில் உள்ள தாயாரும் தனது பிள்ளையின் எதிர்காலத்தினை கருதுகின்றார். உள்நாட்டு போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். தங்களுடைய அதிகார பலம் வீழும் போது இனவாதத்தினை, மதவாதத்தினை ஏற்படுத்துவார்கள். அதனை மக்கள் தோல்வியடைச் செய்தபோதும் தற்போது இனவாதத்தினை, மதவாதத்தினைத் தூக்கிப் பிடிப்பதற்கு முனைகின்றார்கள்.

அடுத்த ஒருமாதத்துக்குள் அவ்வாறு கூக்குரல் இடுபவர்கள் சத்தம் முழுமையாக நின்றுவிடும். அதன் பின்னர் எமது எதிர்காலத்தினை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க முடியும். புதிய அரசியலமைப்பை உருவாக்குவது எமது இலக்குகளில் ஒன்றாகும். அந்த அரசியலமைப்பினை அனைவருடனும் கலந்துரையாடியே அவர்களின் தீர்மானத்துக்கு அமைவாக முன்னெடுப்போம். அது எமது பொறுப்பாகும் என்றார். (ம-7)

## வேலைவாய்ப்பு வெற்றிடம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிவரும் நம்பிக்கையின் ஊற்று பதிவு செய்யப்பட்ட சமூக தொண்டார்வ நிறுவனத்திற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கிராம ரீதியாக பணியாற்ற உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட உள்ளார்கள். விருப்பமுடையோர் நேர்முகத்தேர்விற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

1. கல்வித் தகைமை க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்
2. 50 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல்
3. மாத ஊதியம் - 45,000.00
4. நேர்முகத் தேர்வுத் திகதி : 20.02.2025, வியாழக்கிழமை, மு.ப 9.30 மணி
5. நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் : சோலை வனம், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

(C-2268)

## இதய அஞ்சலிகள்



மலர்வு 11 . 06 . 1990

உதிர்வு 16 . 02 . 2025

கரைச்சி பிரதேச செயலகத்தின் முன்னாள் உதவிப் பிரதேச செயலாளரும் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளருமான

### திருமதி தமிழினி சதீஸ்

அவர்களின் திடீர் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!
அவர் தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!
குடும்பத்தினரின் மனங்கள் ஆறுதலடையட்டும்!

(853)

பிரதேச செயலாளரும் உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம், கரைச்சி, கிளிநொச்சி.


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...




கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெயிலில் அதிக நேரம் செலவிட வேண்டாம்!

## பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சு எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக சூரிய ஒளியில் அதிக நேரம் இருப்பதனை தவிர்க்குமாறு பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.**



அத்துடன், பாடசாலை மாணவர்கள் செயற்படும் விதத்தை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தற்போதைய நாட்களில் கல்வி நடவடிக்கைகள் குறித்து ஏதேனும் ஆலோசனைகள் வழங்கப்படுமாயின் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகள் உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதிக சூரிய ஒளியில் இருப்பதனை தவிர்க்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உட்பட உலகின் மத்திய ரேகை பகுதியில் உள்ள பல நாடுகளில் தற்போதைய நாட்களில் அதிக வெப்பநிலை நிலவுகிறது.

அதன்படி ஆசியா, ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களில் உள்ள நாடுகளும் அதிக வெப்பநிலையினால் பாதிக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மன்னார், கொழும்பு, காலி, இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் வெப்பநிலையானது எதிர்வரும் நாட்களில் 32 முதல் 36 பாகை செல்சியஸ் வரை காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலையினால் உடல் வெப்பநிலை அதிகரித்து பல உடல்நல பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால் அதிகளவில் நீர் அல்லது இயற்கை பானங்களை பருகுமாறு சுகாதார அதிகாரிகள் கோரியுள்ளனர். (நி-8)

# அநுர அரசை வீழ்த்துவதென்பது வெறும் பகல் கனவு- பிரதமர்

(கொழும்பு)

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தை வீழ்த்த முடியாது. அவ்வாறு எவராவது நினைப்பார்களாயின் அது வெறும் கனவு மாத்திரமேயாகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அரலகங்வில பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் உரையாற்றுகையில், "எமது தலைமைத்துவத்தின் மீதும் அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளால் எமது அரசாங்கத்தை வீழ்த்த முடியாது. எமது அரசாங்கம் மக்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அதனை அவர்களே பாதுகாக்கின்றனர்.


அண்மையில் சில எதிர்கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சென்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்தாமல் அதனை காலம் தாழ்த்துமாறும் கோரிக்கை முன்வைப்பதை செய்திகளில் பார்த்தேன்.

இன்னும் இவர்களால் மக்களிடத்துக்குச் சென்று கலந்துரையாட முடியாமல் உள்ளது. இவ்வாறான கோழைகளுக்கு அரசாங்கத்தை வீழ்த்துவது என்பது வெறும் கனவு மாத்திரமேயாகும்.

இந்த நாட்களில் எதிர்க்கட்சிகள் என்ன செய்கின்றன? எமது அரசியல் கொள்கை பிரகடனம் மற்றும் எமது அரசியல் கலாசாரத்துடன் அவர்களுக்கு மோதிக்கொள்ள முடியுமா? உண்மையில் அவர்களால் அதனை நினைத்துக்கூட பார்க்க முடியாது. அவ்வாறு நினைத்து பார்ப்பது வேடிக்கையான விடயமாகும்.

இதன் காரணமாகவே அவர்கள் எமக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள்" என அவர் தெரிவித்தார். (நி-8)

# இந்தியப் பிரதமர் மோடியை சந்திக்கவுள்ள ரணில்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சனிக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் செய்ய உள்ளார். இந்த விஜயத்தின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட உள்ளார்.

2024 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கை - இந்திய கூட்டுத்திட்டங்கள் தொடர்ந்தும் இழுபறி நிலையை எதிர்கொண்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பிருந்தே இலங்கையில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்ட இந்திய திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதாக குறிப்பிட்டு வந்தது.

குறிப்பாக அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் திட்டம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்களை முன்வைத்த அரசாங்கம், ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய தீர்மானித்ததைத் தொடர்ந்து அதானி நிறுவனம் அத்திட்டத்திலிருந்து விலகிக்கொண்டுள்ளது.

மேலும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு பல்வேறு வகையில் ஒத்துழைப்புகளை வழங்கியிருந்த இந்தியா, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைப்பதற்கும் பங்காற்றியிருந்தது.

ஆனால் இலங்கையில் இந்தியா திட்டமிட்டிருந்த கூட்டுத்திட்டங்கள் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தொடர்ந்தும் தாமதப்படுத்தப்படுகின்றமை டில்லியின் கவலைகளில் ஒன்றாக காணப்படுகின்றது.

குறிப்பாக, திருகோணமலை மின் நிலைய விவகாரம் மற்றும் வடக்கு தீவுகளின் சூரிய சக்தித் திட்டம் எனப் பல்வேறு திட்டங்கள் வெறும் ஆவண கோப்புகளாகவே உள்ளன.

இத்தகைய நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இந்தியத் திட்டங்கள் குறித்து தொடர்ந்தும் இருதரப்பும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் ரணில் விக்கிரமசிங்க டில்லி செல்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

# 3 மாதங்களில் பணவீக்கம் அதிகரிக்கும் மத்திய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

திறமையான தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் ஏற்படும் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தியில் பின்னடைவு ஏற்படும் என இலங்கை மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்கான அதன் முதல் நாணயக் கொள்கை அறிக்கையை வெளியிட்டு மத்திய வங்கி இதனைக் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகத் தொழிலாளர்கள் பெருமளவில் வெளியேறுவதும் நிபுணர்களின் இடப்பெயர்வு காரணமாக அனுபவம் வாய்ந்த பணியாளர்களை இழப்பதும் வணிகங்களில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும். இது உற்பத்தித்திறனில் தொடர்ச்சியான சரிவுக்கு வழி வகுக்கும்.

அதன்படி தொழில்துறை உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், மின்சார உற்பத்தி போன்ற துறைகள் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் ஏற்படும் கொள்கை மாற்றங்கள், இலங்கையின் வெளிநாட்டுத் துறைக்கு முக்கியமாக உலகளாவிய வர்த்தகம், முதலீடு, மூலதன ஓட்டங்கள், பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.


இதனிடையே இந்த ஆண்டின் ஜனவரி மாத கணக்கெடுப்பின்படி, அரசாங்க செலவினம் மற்றும் ஊதிய உயர்வு, தனியார் வாகன இறக்குமதி மீதான தடையைத் தளர்த்துவதன் மூலம் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி, உலகளாவிய பொருட்களின் விலை உயர்வு மற்றும் பண்டிகை மாதங்களில் அதிக தேவை போன்ற காரணிகளால், எதிர்வரும் 3 மாதங்களில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தில் படிப்படியான அதிகரிப்பு அல்லது நீண்ட கால அதிகரிப்பு ஏற்படக்கூடும் என இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டுக்கான அதன் முதல் நாணயக் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய அணியில் சூப்பர் ஸ்டார் கலாசாரத்தை ஊக்குவிக்கக் கூடாது

### அஸ்வின் காட்டம்



சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற இந்தியாவின் தலைசிறந்த ஸ்பின்னர்களில் ஒருவரான ரவிச்சந்திரன் அஸ்வின், இந்திய கிரிக்கெட்டில் சூப்பர் ஸ்டார் கலாசாரத்தை ஊக்குவிக்கக் கூடாது என்று வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்.

தனது இந்தி யூடியூப் சேனலில் இது குறித்து பேசியிருக்கும் அஸ்வின், இந்திய கிரிக்கெட்டில் இது போன்ற விடயங்களை முதலில் சாதாரண நிலைக்கு கொண்டு வரவேண்டும். இந்திய அணியில் சூப்பர் ஸ்டார் வழக்கத்தை, பிரபலங்களை நாம் ஊக்குவிக்கக் கூடாது.

நாங்கள் கிரிக்கெட் வீரர்கள் தானே தவிர, நடிகர்களோ சூப்பர் ஸ்டார்களோ அல்ல. நாம் விளையாட்டு வீரர்கள். சாதாரண மக்களை பிரதிபலிப்பவராக இருக்க வேண்டும். அவர்கள் நம்மைத் தங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவராக நாம் இருக்க வேண்டும்." என்று கூறினார்.

கிரிக்கெட் என்னதான் குழு ஆட்டமாக இருந்தாலும், 11 பேரும் ஒத்துழைத்தால்தான் வெற்றி நிச்சயம் என்றாலும் தனிமனித துதிபாடலே அதிகமாக இருக்கிறது.

அதுவும், கிரிக்கெட் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு பெரும் வணிகமாக்கப்பட்ட இந்தியாவில் இந்த சூப்பர் ஸ்டார் கலாசாரம் உச்சம் பெற்றுள்ளது.இதனை ஊக்கு விக்கக்கூடாது என கூறியிருந்தார். (6)

## ஊக்க மருந்து விவகாரம் சின்னருக்கு 3 மாதம் தடை



தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பயன் படுத்தியதற்காக, உலகின் முதல் நிலை டென்னிஸ் வீரர் சின்னருக்கு மூன்று மாதங்கள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவர், கடந்தாண்டில் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தினார் என சர்வதேச விளையாட்டு தீர்ப்பாயத்தில் ஊக்க மருந்து தடுப்பு அமைப்பு வழக்கு தொடர்ந்தது.

கடந்தாண்டு தொடரப்பட்ட இந்த வழக்கில், சின்னரை விடுவித்து தீர்ப்பாயம் தீர்ப்பு கூறியிருந்தது.

ஆனால், இந்த தீர்ப்பை எதிர்த்து ஊக்க மருந்து தடுப்பு அமைப்பு, மேல் முறையீடு செய்தது. இதன் மீதான விசாரணை, ஏப்ரல் மாதம் வரும் என எதிர்பார்க்கப் பட்டது.

இந்நிலையில், சின்னருக்கும், ஊக்க மருந்து தடுப்பு அமைப்புக்கும் இடையே பேச்சு நடத்தி உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது.

அதன்படி, 3 மாத காலம் டென்னிஸ் விளையாட விதிக்கப்பட்ட தடையை சின்னர் ஏற்றுக்கொண்டார். அந்த தடை ஏப்ரல் மாதம் 13 வரை அமுலில் இருக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

உதவியாளர் மசாஜ் செய்தபோது க்ளஸ்டோபால் என்ற ஊக்க மருந்து அவரது ரத்தத்தில் கலந்து விட்டதாக சின்னர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.(6-8)

## கட்டார் ஓபன்பட்டம் அனிசிமோவா வசமானது

கட்டார் ஓபனின் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் ஜெலினா ஒஸ்டாபென்கோவை 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தியதன் மூலம் அமண்டா அனிசிமோவா சம்பியன் பட்டத்தை வென்றார்.

உலகத் தரவரிசையில் 41 ஆவது இடத்தில் உள்ள அமெரிக்க வீராங்கனை அனிசிமோவா, இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற மிகக் குறைந்த தரவரிசை வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார்.இது 2022 ஜனவரிக்கு பின்னர் அனிசிமோவா வெற்றி கொள்ளும் முதல் பட்டமாகும்.

2023 ஆம் ஆண்டு தரவரிசையில் 359 ஆவது இடத்தில் இருந்த அவர் சோர்வு மற்றும் மனநலம் காரணமாக விளையாட்டிலிருந்து ஓய்வு எடுத்தார்.ஆனால் 23 வயதான அவர் மீண்டு வந்ததில் இருந்து தனது அதீத திறனை வெளிப் படுத்தி தரவரிசையில் 18 ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளார்.

இது சர்வதேச மகளிர் டென்னிஸ் தர வரிசை யில் முதல் 20 இடங்களுக்குள் அவர் வரும் முதல் தருண மாகும். அனிசிமோவா 2002 இல் மோனிகா செலஸைத் தொடர்ந்து கட்டார் ஓபன் பட்டத்தை வென்ற இரண்டாவது அமெரிக்கர் ஆவார்.



அதேநேரத்தில், லாத்வியாவின் ஓஸ்டாபென்கோ இப்போது இரண்டாவது முறையாக தோஹாவில் இரண்டாம் இடத்தைப்பிடித்தார்.

2016 இறுதிப் போட்டியிலும் அவர் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி தொடர் டுபாய் சென்றடைந்த இந்திய அணி



ஐசிசி சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் நாளை மறுதினம் பாகிஸ்தானில் ஆரம்பமாகவுள்ளது. இதில் இந்திய அணி பங்கேற்கும் ஆட்டங்கள் மட்டும் டுபாயில் நடத்தப்பட உள்ளது.

இந்நிலையில் இந்தத் தொடரில் பங்கேற்பதற்காக ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி நேற்று முன்தினம் மும்பையில் இருந்து புறப்பட்டு அன்று இரவு அவர்கள் டுபாய் சென்றடைந்தனர்.

கப்டன் ரோஹித் சர்மா, விராட் கோலி, ஸ்ரேயஸ் ஐயர், ரிஷப் பந்த், அக்சர் படேல், முகமது ஷமி, ஹர்ஷித் ராணா, ஷுப்மன் கில், வருண் சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர், குல்தீவ் யாதவ், ஹர்திக் பாண்டியா ஆகியோருடன் பயிற்சியாளர் கவுதம் கம்பீர் மற்றும் உதவி பயிற்சியாளர்கள் பயணித்தனர். எஞ்சிய சில வீரர்கள் விரைவில் இந்திய அணியுடன் இணைய உள்ளனர்.

சம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி பங்களாதேஷ் அணியுடன் மோதுகிறது. தொடர்ந்து 23 ஆம் திகதி பாகிஸ்தானுடனும், மார்ச் 2 ஆம் திகதி நியூஸிலாந்துடனும் இந்திய அணி பலப்பரீட்சை நடத்துகிறது.

இந்திய அணி சமீபத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிரான இருதரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரை 3-0 என முழுமையாக வென்ற நிலையில் சம்பியன்ஸ் டிராபி தொடரில் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோயால் ஆண்டு தோறும்

# 10 ஆயிரம் பேர் உயிரிழப்பு


(கொழும்பு)

**இலங்கையில் சிறுநீரக நோய்களினால் ஆண்டு தோறும் சுமார் பத்தாயிரம் பேர் மரணிக்கின்றனர்.**

நாட்டில் சுமார் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளிகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

வறுமை மற்றும் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற காரணிகளினால் இவ்வாறு மரணிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, பதுளை, மொனறாகலை, பொலனறுவை, அநுராதபுரம், குருநாகல் போன்ற மாவட்டங்களில் அதிகளவான சிறுநீரக நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-8)

### 20 ஆம் திகதி முதல்

## சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான 3000 ரூபா கொடுப்பனவை இம்மாதம் 20 ஆம் திகதி முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதியோர்களுக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் குறித்த கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்பட்டதாக அதன் பணிப்பாளர் சதுர மிஹிதும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களின் காரணமாக கடந்த காலங்களில் உரிய தினத்திற்குள் அந்தக் கொடுப்பனவை வழங்க முடியாது போனமையினால் சிரேஷ்ட பிரஜைகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடி குறித்த கொடுப்பனவையும் நிலுவைத் தொகையையும் தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களின் ஊடாக இம் மாதம் 20 ஆம் திகதி முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் சதுர மிஹிதும் தெரிவித்தார்.

அஸ்வெசும பயனாளிகள் குடும்பத்திலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கான குறித்த கொடுப்பனவு நலன்புரி நன்மைகள் சபையினால் நேரடியாக அஸ்வெசும கணக்குகளிலேயே வைப்புச் செய்யப்படுகின்றது. (நி-8)

## குருபூசை தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையால் நடத்தப்படவுள்ள புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை தினமும் சைவ நெறித் தேர்வு பரிசளிப்பு விழா நிகழ்வும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு இல.66, கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபைத் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக பணிப்பாளர் திருமதி.மாலதி முகுந்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

## சீன அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(கொழும்பு)

ஐந்து நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நல்லிணக்கம் மற்றும் இன விவகாரங்களுக்கான சீன அமைச்சர் பான் யூ தலைமையிலான உயர் மட்ட குழுவினர் நாளை மறுதினம் 19 ஆம் திகதி புதன்கிழமை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்டவர்களை சந்திக்க உள்ளதுடன், யாழ்ப்பாணம் மற்றும் கண்டிக்கு விஜயம் செய்வதற்கும் தீர்மானித்துள்ளனர்.

சீன அமைச்சர் பான் யூ, இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இன நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளார்.

குறிப்பாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார மற்றும் புத்தசாசனம், மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி உள்ளிட்ட அதிகாரிகளுடன் சீன தரப்பு விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுக்க உள்ளனர்.

அண்மைக் காலமாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சீனாவின் ஆதரவு திட்டங்கள் வலுப்பெற்று வருகின்ற நிலையில், இலங்கைக்கு விஜயம் செய்யும் சீன அமைச்சர் பான் யூ தலைமையிலான உயர்மட்ட குழு, தமிழ் மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இராசிபலன்

17.02.2025
மாசி 05, திங்கட்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.53 மணிவரை

சித்திரை முழுவதும்
சுபநேரம் -12.33-2.03 மணிவரை
இராகுகாலம்- 8.03-9.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தரட்டாதி

வளவன்


மேஷம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


ரிஷபம்

எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மிதுனம்

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரலாம்.


சிம்மம்

வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொன்னான நாள்.


கன்னி

குடும்பத்தினர் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


துலாம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சுப விரையங்களில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.


விருச்சிகம்

பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


தனுசு

உறவினர்கள் உங்களின் மனம் போல் நடந்து கொள்வர், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மகரம்

புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், ரோக பயமுண்டு.


கும்பம்

வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தொழிலில் கவனம் தேவை.


மீனம்

சிறப்பாக பணிகளைச் செய்து குடும்பப் பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ஒரு முறை ஏமாறுவது தவறல்ல பல முறையும் ஏமாறுவது பெருந்தவறு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஜேர்மன் பயிற்சி நிலையத்திற்கு பிரதமர் விஜயம்

## தமிழ்மொழியில் பயிற்சிகளை ஆரம்பிக்குமாறு பணிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள ஜேர்மன் பயிற்சி நிறுவனத்துக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று விஜயம் செய்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் அதிபர் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு இளையோர் ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் இணைய முடியாத நிலைமை காணப்படுவதாக மாவட்டச் செயலர் மற்றும் ஆளுநர் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

ஆங்கிலமொழி மூலமாக பயிற்சிகள் வழங்கப்படுதல் மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் என்பன தகைமையாகக் காணப்படுவதால் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பலர் இணைய முடியாத நிலைமையில் இருப்பதாகக் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த பிரதமர், தமிழ் மொழி மூலமான பயிற்சிகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்தார். (6-8)

# தேசிய வேலைத்திட்டம் வவுனியாவிலும் முன்னெடுப்பு



(குருமன்காடு)

"பிடியளவு கமநிலத்துக்கு" எனும் தேசிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள கமநல சேவை நிலையங்களில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதற்கமைவாக வவுனியா கோயில்குளம் கமநல சேவை நிலையத்திலும் நேற்று முன்தினம் இந்நிகழ்வு இடம்பெற்றது. பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாது இருக்கின்ற சகல வயல் மற்றும் மேட்டுநில காணிகளையும் விளைத்திறனுடன் துரிதமாக பயிரிடல் என்ற நோக்கை அடிப்படையாகக் கொண்டு இவ்வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கமக்காரர்களுக்கு பிடியளவு கமநிலத்துக்கு என்ற வேலைத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து பயிரிடாது இருக்கும் வயல்காணிகளை பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதியாக வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விமலரூபன், உதவி அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-250)

# குன்றும் குழியுமான வீதியினை புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்



(குருமன்காடு)

வவுனியா, போகஸ்வேவெவ - மாமடு வீதியினை புனரமைக்கக்கோரி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட போகஸ்வே வெவ கிராமமானது குடியேற்றக் கிராமமாகும். வவுனியாவில் இருந்து குறித்த கிராமத்திற்கு செல்கின்ற பிரதான வீதியில் மாமடு பகுதியில் இருந்து போகஸ்வே வெவ வரையிலான சுமார் 15 கிலோமீற்றர் நீளமான வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் அவசர நோயாளர்களைக் கூட நோயாளர் காவு வண்டிகளில் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேரூந்துகளும் சீராக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் அவ்வீதியூடாக பயணிக்கும் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே குறித்த வீதியினை புனரமைக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-280)



யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் ப.தயாபரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன. (படம்:மகாலிங்கம்)

# மக்களுக்கான சேவைகளை வழங்கவே உள்ளூராட்சி மன்றங்கள்

## வடக்கு மாகாண ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கு சேவை செய்வதற்கானவையே தவிர வருமானம் ஈட்டுவதற்கானது அல்ல. சேவைகளை முதலில் மக்களுக்கு வழங்குங்கள் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சோலைவரி உட்பட உள்ளூராட்சி மன்றங்களுக்கான அனைத்துக் கட்டணங்களையும் இணைய வழியில் ஒரு பொதுமகன் செலுத்துவதற்கு ஏற்ற வகையில் வழிசெய்யுங்கள்.

இதுவரை அவ்வாறான வழிமுறையில் இணைந்து கொள்ளாத உள்ளூராட்சிமன்றங்கள் விரைவில் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். அரசாங்கமும் டிஜிற்றல் மயமாக்கலைத்தான் ஊக்குவிக்கின்றது. வெளிநாட்டு நிதிமூலங்களில் அமைக்கப்பட்ட கடைகளை குத்தகைக்கு வழங்கும்போது உள்ளூர்வாசிகளுக்கு முன்னுரிமை வழங்குங்கள். உள்ளூர் வாசிகள் கேள்விகோரலில் பெற்றுக்கொள்ளாவிடின் மாவட்டத்துக்கு முன்னுரிமை வழங்குங்கள் என தெரிவித்தார்.

# துரையப்பா விளையாட்டரங்கின் தேவைப்பாடுகளை ஆராய்ந்த விளையாட்டுத்துறை அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்த இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில்குமார கமகே யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனுடன் இணைந்து துரையப்பா விளையாட்டு அரங்கினை நேற்று பார்வையிட்டனர்.

இதன்போது துரையப்பா விளையாட்டு அரங்கின் தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தனர். குறிப்பாக ஒளியமைப்பு வசதிகள், பராமரிப்பு வசதிகள் மற்றும் உள்ளக அரங்கு அமைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்ததோடு அதற்கான திட்ட முன்மொழிவு பொறிமுறை ஒன்றினை உருவாக்கித் தருமாறு அமைச்சர் அரச அதிபரிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணி தொடர்பாகவும் அதனுடைய தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் அமைச்சர் கலந்துரையாடினார்.



இந்நிகழ்வில் வேலணை பிரதேச செயலாளர் க.சிவகரனும் கலந்து கொண்டார். (6-8-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய உயர்ஸ்தானிகர்-ரில்வின் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவை கடந்த வியாழக்கிழமை மாலை அலுவலகத்தில் மாலை சந்தித்து பல்வேறு விடயங் கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பில் இந்திய-இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் வகையில் இந்தச் சந்திப்பை மேற்கொண்டதாக இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இந்த சந்திப்பு கவனம் செலுத்தியது. (நி-8)

# ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு 90 கோடி டொலர்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த ஆண்டு 90 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2024 ஆம் ஆண்டில், இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த போது அதிலிருந்து மீட்கும் நோக்கில் 80 கோடியே 80 லட்சம் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருந்தது.

இந்த ஆண்டு வழங்கப்படும் நிதி குறிப்பாக விவசாயம், மின்சாரம், சுற்றுலா, திறன் மேம்பாடு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை போன்ற துறைகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு வருவதனால் முன்னுரிமை அடிப்படையில் இலங்கைக்குத் தனது ஆதரவினை வழங்கி வருவதாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டகாஃபுமி கடோனோ தெரிவித்துள்ளார். (நி-8)

# கடற்றொழில் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக்கோரி காரைக்கால் கடற்றொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

கடற்றொழில் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி தமிழகத்தின் காரைக்கால் பகுதி கடற் றொழிலாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம்ஒன்றை முன்னெடுத்தனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அண் மையில் இலங்கை கடற்பரப் பில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபரை இந்தியாவிற்கு அழைத்து சிகிச்சையளிக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்துக்கு தங்களது எதிர்ப்பை வெளியிடும் வகையில் காரைக்கால் பகுதி கடற்றொழிலாளர்கள் கடந்த 11 ஆம் திகதி முதல் பணிப்புறக் கணிப்பையும் முன்னெடுத்துள்ளனர். (நி-8)

## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)

**கூறுவிலை கோரல்**

எமது நிறுவனத்தின் தேவைக்காக பின்வரும் பொருட்கள் தேவையாகவுள்ளது இப் பொருட்களை விநியோகிக்கக்கூடியவர்களிடமிருந்து கூறுவிலையினை அதன் தரம் மாதிரி தற்போதைய விலை (நிறுவனத்திற்கு கொண்டு வந்து சேர்ப்பிற்கும் வரையான) என்பவற்றை குறிப்பிட்டு 25.02.2025 இற்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அனுப்ப வேண்டிய முகவரி தலைவர் தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி பருத்தித்துறை வீதி, வரணி, தொலைபேசி இலக்கம் 021 205 0854

1) 25mm (25x17) Standard (180m போத்தலுக்கானது) மூடி.
2) புழு மூடி (750ml போத்தலுக்கானது)
3) 180ml லேபல் (ஸ்ரிக்கர்) அச்சிடுவதற்கான கூலி (மாதிரி வழங்கப்படும்)
4) 750ml லேபல் (ஸ்ரிக்கர்) அச்சிடுவதற்கான கூலி (மாதிரி வழங்கப்படும்)
5) வெற்றுப் போத்தல்கள் (750ml, 375ml, 180ml) புதியது, அல்லது பாவித்தது (பாவிக்க கூடிய நிலையில் இருத்தல் வேண்டும்)

**திரு.க.செல்வேஸ்வரன்**
**தலைவர்**

(சி-2265)

## வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் வ-து

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பொதுமுகாமையாளர் (101/08) பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை சங்க வேலை நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00இனை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் "தலைவர் வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி" என்ற முகவரிக்கு 03.03.2025ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ அனுப்பிவைக்கவும்.

**பதவிப் பெயர் - பொது முகாமையாளர் (01)**
**சம்பள குறியீட்டு இல : 101/08**
**சம்பள அளவுத்திட்டம் :** 20665-260X10-280X10-26065
247980-3120X10-3360X10-312780 **(சு.நி.இல:02/2022 இன்படி)**

**அங்கீகரிக்கப்பட்ட தகுதி:**

அ. கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச் சமமான தகைமை இத் தகைமையானது கணக்கியல்/வியாபாரப் புள்ளி விபரவியல்/வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./
இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் முகாமைத்துவம்/வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்

**பொதுவானது**

- ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
- வயதெல்லை 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு : 076 711 1168 /077 923 2462

**தலைவர், வலிகிழக்கு வாழைக்குலை,**
**உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.**

(சி-2280)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: பூராடம்
1 இல் செவ்
உயரம்: 6"
தகைமை/தொழில்: O/L, Cashier
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/15131

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 6"
தகைமை/தொழில்: A/L, Restaurant (America)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15132

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: பூராடம்
7 இல் செவ்
கி.பா: 40
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15133

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
7இல் செவ்
கி.பா: 70
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA, bank
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15138

பிறப்பு : 1997 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 49
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு : வெளிநாடு
தொ.இ: G/15139

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: கேட்டை
5 இல் சூரி செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSC, Marketing Associate(pvt)
எதிர்பார்ப்பு : Degree and Employee
தொ.இ: G/15141

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கட்டார் மன்னர் இந்தியா விஜயம்



(டில்லி)

கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானி 2 நாள் அரசு முறை பயணமாக இன்று இந்தியா வருகிறார் என இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவும் கட்டாரும் நட்பு, நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் ஆழமான வேரூன்றிய வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து வலுப் பெற்று வருகின்றன.

கட்டாரில் வசிக்கும் இந்திய சமூகம் கட்டாரின் மிகப்பெரிய வெளிநாட்டு சமூகத்தை உருவாக்குகிறது என்று தெரிவித்துள்ளது.

கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானி இந்தியாவுக்கு 2 ஆவது முறையாக வருகிறார்.

இதற்கு முன்பு கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவுக்கு வந்திருந்தார். ( நி-8)

# கூட்ட நெரிச

# 18 பேர் ரயில் நிலைய

## டில்லியில் துயரம்

(டில்லி)

**மகா கும்பமேளா நிகழ்வினை முன்னிட்டு புது டில்லி ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி சுமார் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் காயமடைந் துள்ளனர்.**

ஒன்பது பெண்கள், ஐந்து குழந்தைகள் மற்றும் நான்கு ஆண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தற்போது டில்லியின் லோக் நாயக் ஜெய்பிரகாஷ் மருத்துவமனை மற்றும் லேடி ஹார்டிங் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

2025 மகாகும்பமேளா திருவிழா விற்கு... கள்... பிரயா... கொ... மணி...

# பெயர் மாற்றம் செய்ததற்காக கூகுள் மீது சட்ட நடவடிக்கை

## எச்சரிக்கை விடுத்த மெக்சிக்கோ ஜனாதிபதி

(மெக்சிக்கோ)

கூகுள் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மெக்சிக்கோ ஜனாதிபதி கிளாடியா ஷேன் பாம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றவுடன் மெக்சிக்கோ வளைகுடாவை அமெரிக்க வளைகுடா என்று பெயர் மாற்றம் செய்வதாக ட்ரம்ப் அறிவித்தார்.

மெக்சிக்கோ வளைகுடா பெயர் மாற்றம் குறித்து ட்ரம்ப் அறிவித்த சில நாட்களிலேயே கூகுள் நிறுவனத்தின் கூகுள் மேப் செயலியில் மெக்சிக்கோ வளைகுடாவின் பெயரை அமெரிக்க வளைகுடா என்று பெயர் மாற்றியது.

கடந்த வாரம் மெக்சிக்கோ




பெயர் மாற்றம் தொடர்பான அதிகார பூர்வ ஆவணத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

ஜனாதிபதியின் அதிகார பூர்வ விமானமான ஏர் ஒன் விமானத்தில் நியூ ஆர்லியன்ஸ் நகருக்குப் பயணித்த போது இதற்கான ஆவணங்களில் ட்ரம்ப் கையெழுத்திட்ட காணொளி வெளியாகி இருந்தது.

இருப்பினும் இந்த பெயர் மாற்றமானது கூகுள் நிறுவனத்தின் அமெரிக்க பயனர்களுக்கு மட்டுமே செயற்படுத்தப்பட்டது.

மெக்சிக்கோ வளைகுடா வில் கூகுள் மேப் செயலியில் மெக்சிக்கோ வளைகுடா என்றும், அமெரிக்காவில் அமெரிக்க வளைகுடா என்றும், இதர நாட்டில் கூகுள் மேப் செயலியில் மெக்சிக்கோ வளைகுடா (அமெரிக்க வளைகுடா) என்றும் கூகுள் நிறுவனம் பெயர் மாற்றம் செய்துள்ளது.

இதையடுத்து, "கூகுள் மேப் செயலியில் மெக்சிக்கோ வளைகுடாவை அமெரிக்க வளைகுடா என்று பெயர் மாற்றிய காரணத்தால் கூகுள் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என மெக்சிக்கோ ஜனாதிபதி கிளாடியா ஷேன்பாம் தெரிவித்துள்ளார்.

மேலும், "சட்ட நடவடிக்கையைத் தவிர்க்க கூகுள், தனது முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும்" எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# அமெரிக்கா

## என்கிறார் உக்



(கீவ்)

"ஐரோப்பிய பிராந்தியத்துக்கு பொது இராணுவத்தை உருவாக்க வேண்டும். பாதுகாப்புக்கு இனி அமெரிக்கா உதவாது" என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைனில் நடந்த பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் ஜெலன்ஸ்கி பேசியதாவது, ஐரோப்பிய பிராந்தியத்துக்கு பொது இராணுவத்தை உருவாக்க வேண்டும்.

பாது... உத... அ... அழு... ரஷ்... காப்... இரா... நேர... ர... நாட்... அழி... எது...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ரிசலில் சிக்கி

# ...லயத்தில் உயிரிழப்பு!

...ம்

...து டில்லி
...கிழமை
...18 பேர்
...மடைந்



...த்துவ ...பட்டு ...கின்ற ... ...விழா

விற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகருக்கு சென்று கொண்டிருந்த போது இரவு 10 மணியளவில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

ரயில் புறப்படுவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் சுமார் 1,500 பொது ரிக்கெட்டுகள் விற்பனையானது, நிலைமையை மோச மாக்கியதாகவும் அதிகபடியான கூட்டத்திற்கு வழி வகுத்ததாகவும் கூறப்படுகிறது. (நி-8)

# பிரிக்ஸ் உச்சி மாநாடு ரியோ டி ஜெனிரோவில்

## உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானது




(பிரேசில்)

அடுத்த பிரிக்ஸ் உச்சி மாநாடு எதிர்வரும் ஜூலை 6-7 ஆம் திகதிகளில் ரியோ டி ஜெனிரோவில் நடைபெறும் என்று பிரேசில் அறிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு வரை வளரும் பொருளாதாரங்களின் கூட்டமைப்பிற்கு பிரேசில் தலைமை தாங்குகிறது.

மேலும் இந்த அமைப்பானது உலகளாவிய தெற்கு நாடுகளிடையே உலகளாவிய நிர்வாக சீர்திருத்தம் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு பிரிக்ஸ் அமைப்பு பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் இணைந்து நிறுவப்பட்டது. பிறகு, 2010 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்கா இந்த அமைப்பில் இணைந்தது.

கடந்த ஆண்டு, ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றைச் சேர்ப்பதன் மூலம் இந்த கூட்டமைப்பு விரிவடைந்தது. அத்துடன் சவுதி அரேபியாவுக்கு இந்த அமைப்பில் சேர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர துருக்கி, அஜர்பைஜான் மற்றும் மலேசியா முறையாக உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளன. மேலும் பல நாடுகள் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. (நி-8)

# ...க்கா இனி உதவாது!

## ...ார் உக்ரைன் ஜனாதிபதி



...துக்கு ...வாக்க ... இனி ... உக் ...ஸ்கி ... ...காப்பு ...லன் ...ப்பிய ...ாணு ...டும்.

பாதுகாப்புக்கு இனி அமெரிக்கா உதவாது.

அமெரிக்கா ஐரோப்பாவுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. ரஷ்யாவை எதிர்கொள்ள பாதுகாப்பு அவசியம். இதனால் பொது இராணுவத்தை உருவாக்கும் நேரம் வந்துவிட்டது.

ரஷ்யாவிற்கு எதிரான தனது நாட்டின் போராட்ட மாக அதற்கான அடித்தளத்தை உருவாக்கி உள்ளது. ஐரோப்பிய பிராந்தியத்துக்கு பொது இராணுவம் வேண்டும் என்பது குறித்து பல தலைவர்கள் நீண்ட காலமாக பேசி வருகின்றனர்.

உக்ரைன்-ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான எந்தவொரு பேச்சுவார்த்தைக்கும் நாங்கள் ஒத்துழைப்பு அளிப்போம். நாடு பாதுகாப்பு உத்தரவாதங்களை விரும்புகிறது எனத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் இடையேயான தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து, பாதுகாப்பு மாநாட்டில் உக்ரைனின் எதிர்காலம் முக்கியப் பொருளாக இருந்தது. 3 ஆண்டு கால ரஷ்யா-உக்ரைன் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பு உருவாகி உள்ளது என நிபுணர்கள் தெரிவித்தனர். (நி-8)

# உக்ரைன் யுத்தம் குறித்து அவசர உச்சி மாநாடு



(பாரிஸ்)

உக்ரைன் யுத்தம் குறித்து ஐரோப்பியத் தலைவர்கள் அடுத்த வாரம் அவசர உச்சி மாநாடொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

பாரிசில் நடைபெறவுள்ள இந்த மாநாடு தேசிய பாதுகாப்பு குறித்து நாடுகள் மிகவும் அரிதாக மேற்கொள்ளப்படும் சந்திப்பென தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஐரோப்பிய நாடுகள் நேட்டோவில் அதிக பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரித்தானியப் பிரதமர் கியர் ஸ்ராமர் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைனுக்கான அமெரிக்க ஜனாதிபதியின் விசேட தூதுவர், யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவது தொடர்பாக அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையேயான எந்தவொரு பேச்சுவார்த்தைகளிலும் ஐரோப்பியத் தலைவர்கள் பங்கு கொள்ளமாட்டார்கள் என தெரிவித்த நிலையில் பாரிஸ் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

அதேவேளை, அமெரிக்க வெளிவிவகாரத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ உட்பட சிரேஷ்ட வெள்ளை மாளிகை அதிகாரிகள் எதிர்வரும் நாட்களில் சவுதி அரேபியாவில் ரஷ்ய மற்றும் உக்ரைன் பேச்சுவார்த்தையாளர்களை சந்திக்கவுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இந்த நிலையில் மாத இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை வெள்ளை மாளிகையில் பிரித்தானியப் பிரதமர் சந்திக்கும் போது ஐரோப்பியத் தலைவர்களின் கருத்துக்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கியுடன் ஐரோப்பிய தலைவர்கள் பிறிதொரு சந்திப்பை மேற்கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 16,000 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த ஒரு மாத காலப்பகுதியினுள் போதைப் பொருளுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் சுமார் 16,000 பேர் கைதாகியுள்ளதாக ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 12 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் குற்றங்கள், போதைப்பொருள் மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான விசேட நடவடிக்கையின்போது, அவர்கள் கைதானதாக விசேட செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் கீழ், குற்றங்களுடன் நேரடி தொடர்புடைய 922 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 14,000 பேரும் கைதானதாகவும் குறித்த காலப்பகுதியில் 197 சட்டவிரோத துப்பாக்கிகளும் மீட்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்த காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 11,054 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-8)

# போதைப் பொருளுடன் கனேடிய பெண் கைது

(கொழும்பு)


கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுமார் 360 மில்லியன் ரூபாய் பெறுமதியான "ஹாஷிஷ்" போதைப்பொருளுடன் வெளிநாட்டு பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் ரொறன்ரோவில் இருந்து 36 வயதான கனேடிய பெண் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தார்.

அதன் பின்னர் அவர் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இலங்கை சுங்கத்துறைக்கு கிடைத்த சர்வதேச புலனாய்வுத் தகவலைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் கொண்டு வந்த இரண்டு சூட் கேஸ்களுக்குள் 36.5 கிலோகிராம் "ஹாஷிஷ்" போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இந்த ப் போதைப் பொருள் வேறு நாட்டிற்கு மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்கத்தில் இருந்ததாக அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 700 | 600-700 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 1350 | 1200 | 1250-1300 | 1400 |
| தக்காளி | 120 | 250 | 90-100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 300 | 200 |
| கோவா | 350 | 350 | 250 | 400 |
| கரட் | 850 | 600 | 840 | 1000 |
| பூசணி | 140 | 120 | 80 | 200 |
| புடோல் | 280 | 200 | 200-250 | 400 |
| வாழைக்காய் | 160 | 150 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 600 | 450-500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 300 | 300-350 | 600 |
| கருணைக் கிழங்கு | 250 | 180 | 150 | 300 |
| பயற்றங்காய் | 600 | 650 | 500-600 | 600 |
| லீக்ஸ் | 400 | 300 | 380 | 600 |
| பீற்றூட் | 250 | 250 | 250 | 400 |
| கறிமிளகாய் | 1000 | 1000 | 700-800 | 1200 |
| முருங்கைக்காய் | 3000 | 1000 | 1500 | 2400 |
| போஞ்சி | 350 | 300 | 350-400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 500 | 700 | 500 | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 250 | 150 | 150-200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 150-250 | 220-280 |
| இராசவள்ளி | 500 | 600 | 500-600 | 500 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 100-150 | 200 |
| முள்ளங்கி | 120 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | 120 | 80 | 150 | 120 |

# இன்று ஒரு தகவல் 323



பகுதி-02 தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அன்பின் வலிமை

ஒரு ராஜா இருந்தார். அவருக்கு என்ன பொழுதுபோக்குத் தெரியுமா? தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம் ஏடாகூடமாக கேள்விகேட்க வேண்டியது. அவர்கள் பதில் சொல்லத் தெரியாமல் முழிப்பார்கள். அதைப் பார்த்து இரசிக்க வேண்டியது. ஒரு நாள் அவருடைய மந்திரி ஒருவர் அவரிடம் மாட்டினார். அவரை அருகில் கூப்பிட்டு அமைச்சரே எனக்கு ஒரு சந்தேகம் என்றார். என்ன? என்றார் அமைச்சர். கடவுள் இருகின்றாரா என்று ஒரு கேள்வி கேட்டார். ஆமாம் இருக்கிறார் என்றார் அவர். அவர் என்ன சர்வவல்லமை படைத்தவரா? என்றார். ஆமாம் அரசரே அவனின்றி ஒரு அணுவும் அசையாது. இருந்த இடத்திலிருந்தே கண் சிமிட்டும் நேரத்திலே ஏராளமான அற்புதங்களை நிகழ்த்த அவனன்றி யாரால் முடியும்? என்றார் அமைச்சர்.

இந்த இடத்திலே தான் எனக்கு இன்னொரு சந்தேகம் என்றார் ராஜா. என்ன சொல்லுங்கள் என்றார் அமைச்சர். நீங்கள் சொல்கின்றீர்களே சர்வவல்லமை படைத்தவர். இருந்த இடத்திலிருந்தே ஏராளமான அற்புதங்களைச் செய்யக்கூடியவர் என்று. அப்படி இருக்கும் போது அவர் இருந்த இடத்திலிருந்தே ஒருவருடைய கஷ்டத்தை தீர்த்து வைத்து விடலாமே. Magic செய்கின்ற மாதிரி அதைவிட்டுவிட்டு பக்தன் கூப்பிட்டால் உடனே ஒரு வாகனத்தின் மேலே ஏறி ஏன் இங்கே ஓடி வர வேண்டும். அப்படி வருவதாக புராணங்கள் எல்லாம் சொல்கின்றதே! அவருக்கு இருக்கின்ற சக்திக்கு அவர் உட்கார்ந்த இடத்திலிருந்தே ஒரு விரலை அசைத்தால் இங்கே பக்தனுக்கு கிடைக்க வேண்டியது கிடைத்து விடாதா? என்றார்.

அமைச்சர் யோசித்தார். அதன்பின் சொன்னார். அரசே இந்தக் கேள்விக்கான பதிலை சமயம் வரும் போது உங்களுக்கு சொல்கின்றேன். என்று சொல்லி அப்போதைக்கு அவரிடமிருந்து தப்பித்தார். சிறிது காலம் கழித்து ஒரு நாள் ராஜா உல்லாசப் பயணம் புறப்பட்டார். அவருடைய குடும்பம், உறவினர்கள் இன்னும் எல்லோரும் சேர்ந்து போனார்கள். ஒரு பெரிய படகிலே ஏறி ஒரு நதியைக் கடந்து போய் கொண்டிருந்தார்கள். அந்தப் படகின் ஒரு முனையிலே ராஜா உட்கார்ந்து நதியின் அழகை இரசித்துக் கொண்டிருந்தார். இன்னொரு முனையிலே அமைச்சர் ராஜாவின் குமாரனுக்கு வேடிக்கை விளையாட்டுக் காட்டி கொண்டிருந்தார்.

படகில் இருந்து நடு ஆற்றிலே குதித்து ராஜாவிடம் வந்தார். அரசே இளவரசர் படகிலே பத்திரமாக இருக்கின்றார். தண்ணீரிலே விழுந்தது வெறும் கல் தான் என்றார். இரண்டு பேரும் ஈர உடையோடு படகுக்கு வந்து சேர்ந்தனர். ராஜா அமைச்சரைக் கோவமாகப் பார்த்தார். இது என்ன விளையாட்டு என்றார். அரசே சிறிது நாட்களுக்கு முன்பு நீங்கள் கேட்ட கேள்வியின் பதிலை நான் அனுபவ ரீதியாக உணர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதனாலே தான் இப்படி என்றார் அமைச்சர் . அதன் பின் விளக்கம் கொடுத்தார்.

அரசே! ஒரு பக்தனுக்கு கஷ்டம் என்றால் இருந்த இடத்திலிருந்தே அதைத் தீர்த்து வைக்காமல் கடவுள் ஏன் நேரிலே ஓடி வர வேண்டும்? என்று கேட்டீர்கள். இப்போது நடந்தது என்ன? இளவரசன் தண்ணீரிலே விழுந்து விட்டான் என்றதும் நீங்கள் ம் என்று ஒரு விரலைக் காட்டினால் போதும் உடனே தண்ணீரிலே குதிக்க ஏராளமான காவல் வீரர்கள் இங்கு இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள். இளவரசன் விழுந்து விட்டான் என்ற உடனே அவன் என்ன திசையில் எந்தப்பக்கம் விழுந்து விட்டான் என்று கூடப் பார்க்காமல் உடனே தண்ணீரிலே குதித்தீர்கள். அப்படி உங்களை குதிக்க வைத்தது என்ன?

மகன் மேலே உள்ள பாசம். அன்பு அது மாதிரி தான் கடவுளும் ஓடிவருகிறார். அப்படி என்கின்றார்.

அதற்குப் பின்பு அந்த ராஜா ஏடாகூடமாக கேள்வி கேட்கிறதை விட்டுவிட்டார்.


இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு உடனே நீங்களும்.. கடவுளே கொஞ்சம் இப்படி வந்துவிட்டுப் போ என்று கூப்பிட்டு அவர் வருகிறாரா என்று ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்காதீர்கள். இந்தக் கதையின் கருத்து என்ன என்றால் அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்கிறது தான். அன்பு வலிமையானது என்பதைப் புரிந்து கொண்டால் போதும்.

உங்களுக்கு ஒரு கல்யாணப் பத்திரிகை வருகின்றது. அதற்கு நீங்கள் வாழ்த்துச் செய்தி அனுப்புவதற்கும் நேரிலே போவதற்கும் வித்தியாசம் இருக்குதல்லவா? அன்றைக்கு ஒருத்தன் அப்படித்தான் வந்தான். கையிலே ஒரு கல்யாணப் பத்திரிகை வைத்திருந்தான்.

சேர்.. இந்தக் கல்யாணம் கொல்கத்தாவிலே நடக்கிறது. மிகவும் தூரம் தான் இருந்தாலும் நான் நேரிலே போய் கலந்து கொள்ளப் போகின்றேன் என்றான். மாப்பிள்ளை அவ்வளவு நெருக்கமானவரா என்றேன். இல்லை சேர் மாப்பிள்ளையே நான் தான் அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரை சந்தித்த கனேடிய தூதுவர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கு பய ணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கைக்கான கனேடியத் தூதுவருக்கு வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், தேவைப்பாடுகள் மற்றும் மக்களின் எதிர்பார்ப்புக்கள், சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி, பாதைவலையமைப்பு தொடர்பான மேம்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் பலாலி விமான நிலையத்துக்கு கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து சேவைகள் இடம்பெற்றால் சிறப்பானது எனவும், அத்துடன் தற்போதைய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பலத்த எதிர்பார்ப்பு நிலவுவதாகவும் குறிப்பிட்ட தூதுவர் அரசாங்கம் கூறிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மக்கள் ஆவலாக இருப்பதாகவும் தெரிவித்தார். (நி-8)

# மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட தடகள போட்டி

## நல்லூர் பிரதேச செயலகம் முதலிடம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தும் வகையில் மாவட்ட மட்டத்தில் இத்தடகள விளையாட்டுப் போட்டி இடம்பெற்றது.

இவ் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலகம் முதலாவது இடத்தினையும், பருத்தித்துறை பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தினையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்டத் தடகள விளையாட்டு போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (6-8-33)

# கிரிக்கெட் உபகரணங்களை வழங்கினார் அமைச்சர் சுனில்

(தருமபுரம்)

வடமாகாண பாடசாலைகள் கிரிக்கெட்டை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சினால் 47 பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமாரகமகே தலைமையில் நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் இடம்பெற்றது.

5 மாவட்டங்களையும் உள்ளடக்கி அதில் தெரிவு செய்யப்பட்ட 47 பாடசாலைகளுக்கு இவ் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ். முரளிதரன் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-8-316)




# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3293

Search for people, places and things

**வினோத்**

காதல் என்பது மொட்டை மாதிரி
அழக்க அழக்க வளரும்



கல்யாணம் என்பது சொட்டை மாதிரி
ஒரு தடவை விழுந்திட்டால்
வளரவே வளராது

**டில்லு**

நேற்று ஏன் ஸ்கூலுக்கு வரவில்லை?
வீட்டுக்கு சொந்தக்காரங்கள் வந்துட்டாங்க சேர்




நேற்று ஏன் வீட்டுக்கு போகாமல் ஓபிஸில் நின்றீங்கள்?
வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காங்கள் சேர்

**பிரியா**

உங்களை கேவலமாக திட்டுபவர்கள்
உடன் எல்லாம் சேரவே கூடாது என்று
சொன்னால்



யாருமே மனைவியுடன் குடும்பம்
நடத்தவே முடியாது

**சாந்தன்**

வாரத்துல ஒரு நாள் நீ மட்டும்
இல்லை என்றால்




ஊருக்குள்ள பாதிப் பேர் பைத்தியமாக
இருந்திருப்பாங்கள்
தெய்வமே என் தெய்வமே

**அகில்ராஜ்**

உங்களுக்கு தெரிந்த ஒரு
புட்போல் பிளேயர் சொல்லுங்கள்




என் பொண்டாட்டிப்பா

**லூட்ஸ்**

எல்லாரும் happy sunday சொல்லுறாங்கள்




வாரம் வாரம் தான் sunday வருது
ஆனால் எந்த sunday happy ஆக வரும்
என்று தெரியவில்லையே

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 704





## 41 ஆம் அத்தியாயம்
## மதுராந்தகன் நன்றி

முதன் மந்திரியின் கரம் மதுராந்தகன் மேல் பட்டதும் அவன் அலறினான். "ஐயோ! அப்பா! செத்தேன்! என்னைத் தொடவேண்டாம். என் கால்கள்! போச்சு! போச்சு!"

அநிருத்தர் அவனைத் தூக்குவதை நிறுத்தி விட்டு, "இளவரசே! தங்களுக்கு என்ன நேர்ந்தது? தங்கள் கால்களுக்கு என்ன நேரிட்டது?" என்று கவலையுடன் கேட்டார். "என் கால்கள் முறிந்தே போய்விட்டன. நடக்க முடியவில்லை, நிற்கவும் முடியவில்லை!"

முதன் மந்திரி திரும்பிப் பார்த்து, "அடே! பல்லக்கை இவ்விடம் கொண்டு வாருங்கள்!" என்று தம் ஆட்களுக்குக் கட்டளையிட்டார்.

பின்னர், "ஐயா! இந்த விபத்து எப்படி நேர்ந்தது? தாங்கள் மழையில் தனியாகக் கிடக்கும் காரணம் என்ன? தங்களோடு வந்த பரிவாரங்கள் எங்கே? தங்களை இவ்விதம் விட்டு விட்டு அவர்கள் எப்படிப் போகத் துணிந்தார்கள்! அவர்களுக்கு என்ன தண்டனை விதித்தாலும் போதாதே?" என்றார்.

முதன் மந்திரி! யாரையும் தண்டிக்க வேண்டாம்! யார் பேரிலும் குற்றம் இல்லை. மாலை நேரத்தில் குதிரை மேல் ஏறிக்கொண்டு நான் தான் தனியாகக் கிளம்பினேன். நதிக்கரையோரமாகப் போய்க்கொண்டிருந்தேன். திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. ஒரு பெரிய மின்னல் மின்னி இடி இடித்தது. குதிரை மிரண்டு ஓடியது. நான் இந்த மரத்தின் கிளையில் சிக்கிக் கொண்டு கீழே விழுந்து விட்டேன். குதிரை எங்கேயோ போய் விட்டது. விழுந்த வேகத்தில் கால் முறிந்து விட்டதோ அல்லது சுளுக்கிக்கொண்டு விட்டதோ தெரியவில்லை. எழுந்து நிற்கவும் முடியவில்லை. நல்ல வேளையாகத் தாங்கள் இச்சமயம் இங்கு வந்தீர்கள்!"

"ஏதோ தங்களுடைய தந்தை, மகானாகிய கண்டராதித்த தேவர் செய்த புண்ணியம் தான், இந்த மட்டும் நான் இங்கே வரும்படி நேர்ந்தது! கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திருங்கள். பல்லக்கில் தங்களை ஏற்றி விடுகிறேன். மற்ற விபரங்கள் எல்லாம், நாதன் கோவிலில் அடியேனின் இல்லத்துக்குப் போன பிறகு கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்" என்றார் அநிருத்தர்.

பல்லக்கு அருகில் கொண்டு வந்து இறக்கப்பட்டதும் முதன் மந்திரி இளவரசரை மெதுவாகப் பிடித்துத் தூக்கி பல்லக்கினுள் கிடத்தினார். ஆட்களிடம், பல்லக்கைத் தூக்கிக் கொண்டு மெல்ல மெல்ல அசங்காமல் போகவேண்டும் என்று கட்டளையிட்டார். தாமும் பல்லக்கின் அருகிலேயே தொடர்ந்தாற் போல் நடந்து சென்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் நாதன் கோவில் என்று வழங்கிய சுந்தரசோழ விண்ணகரத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அந்த ஊர்ப்பெருமாள் கோயிலுக்கு அருகில் முதன் மந்திரி அநிருத்தரின் மாளிகை ஒன்று இருந்தது. அதற்குள் இளவரசர் மதுராந்தகரைத் தூக்கிச் சென்று அங்கிருந்த கட்டிலில் கிடத்தினார்கள். விளக்கு வெளிச்சம் கொண்டுவரச் சொல்லிப் பார்த்ததில் கால் முறியவில்லையென்றும் வெறும் சுளுக்குத்தான் என்றும் தெரிந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உழைத்தால் மட்டும் போதுமா?



நாள் முழுக்க வேலை தேடி அலைந்தார் ஒருவர். மாலையில் மரக்கடை ஒன்றை கண்டார். ஐயா நான் கடின உழைப்பாளி எந்த வேலை கொடுத்தாலும் நன்றாக செய்வேன் என முதலாளியிடம் உறுதி அளித்தார். மரம் வெட்டும் வேலை கிடைத்தது. முதல் நாள் அக்கறையுடன் வேலை செய்தார்.

மற்ற தொழிலாளிகளை விட வேகமாக மரம் வெட்டும் பணியைச் செய்து முடித்தார். புதியவரின் திறமையைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

ஆனால் விதி சதி செய்தது. அடுத்தடுத்த நாட்களில் அவரால் முதல் நாளைப் போல வேகமாக வேலை செய்ய முடியவில்லை. மற்றவர்களின் பரிகாசத்திற்கு ஆளானார். ஒரு வாரம் கடந்த பின்" என்ன ஆச்சு முதல் நாள் ஆர்வமாக மரம் வெட்டினீர்களே இப்போது ஏன் முடியவில்லை வேகம் குறைந்து விட்டது" என்று கேட்டார் முதலாளி.

ஏன் என்று தெரியவில்லை முதல் நாளைப் போல் அக்கறையுடன் தான் வேலை செய்கிறேன் என்றார் அவர். "அப்படியானால் கோடாரியை காட்டுங்கள் அதை எப்படி கூர்மை செய்துள்ளீர்கள் என்று பார்க்கட்டும்" என் றார் முதலாளி. கூர்மையா இதுவரை பட்டை தீட்டவே இல்லை என்றார் அவர்.

முதல் நாளில் பட்டை தீட்டி கொடுத்தேனே அதை வைத்தே வெட்டிக் கொண்டு இருக்கிறீர்களா" என்றார் முதலாளி. அவரும் "ஆமாம்" என்றார்.

இதுதான் பிரச்சினை பட்டை தீட்டாமல் வெட்டினால் கோடாரி மட்டுப்பட்டு விடும்.

கடினமாக உழைத்தும் பலன் கிடைக்காது என் றார் முதலாளி. அதன் பின் கோடாரியைக் கூர்மைப்படுத்துவதைத் தன் முதல் வேலையாகக் கொண்டார் மரம் வெட்டுபவர்.

நீதி : உழைத்தால் மட்டும் போதுமா வெற்றி பெற புத்தி சாலித்தனமும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களின் அரசியல் அநாதையாகி விட்டது

அரசியல் என்றாலே தமிழர்களாகிய எமக்கு வெறுப்பும் விரக்தியுமாக உள்ளது. அந்தளவுக்கு அரசியல் எங்கள் மக்களால் வெறுக்கப்படுகிறது.

இதற்குக் காரணம் என்னவென்று யாரேனும் வினவுவார்களாயின், அதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படும்.

அந்தக் காரணங்களுக்குள் தென்பகுதி அரசியல்வாதிகளே காரணம் என்பதாக எந்தப் பதிலும் இடம்பெற்றிருக்கமாட்டாது என்பதை நாம் அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஆம், உண்மையில் எங்கள் தமிழ் மக்கள் எங்கள் அரசியல் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். அரசியல் உரிமைக்காக அகிம்சை வழிப் போராட்டங்களை நடத்தியவர்கள்.

அகிம்சை வழிப் போராட்டம் பயனற்றுப் போக, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

அதற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த தமிழ் இளைஞர் யுவதிகள் கொஞ்சமல்ல.

இதற்கும் மேலாக, விடுதலைப் போராட்டத்துக்காக தங்கள் உயிரை ஈந்தளித்த தமிழ் மக்கள் பல்லாயிரம்.

இவ்வாறாக ஒரு பெரும் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்த எம் தமிழினம் இன்று அரசியலையும் அரசியல்வாதிகளையும் வெறுக்கின்றனரெனில், அதற்குக் காரணம் எங்கள் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், இப்போது எங்கள் தமிழ் அரசியல் அநாதையாகியுள்ளது. இங்கு இருக்கக் கூடிய தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களின் உரிமைக்காகக் களத்தில் குதிக்கப் போவதில்லை.

உண்மை. இப்போதெல்லாம் தமிழ் அரசியல்வாதிகள் பகைகொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே இத்தகையவர்கள் தங்களின் பகையை வலுப்படுத்தி அது தொடர்பில் வியூகங்களை அமைப்பார்களேயன்றி, இவர்கள் இனி எம் இனத்தின் உரிமைக்காக ஒரு போதும் குரல் கொடுக்கமாட்டார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதை இன்னும் தெளிவுபடுத்திக் கூறுவதாயின், தமிழ் அரசியல்வாதிகள் எங்கள் உரிமை சார்ந்த விடயங்களில் கருசனை கொள்ளப்போவதில்லை.

**எனவேதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட எங்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கையாளக்கூடிய புத்திஜீவிகள் அடங்கிய அணியொன்றை உருவாக்க வேண்டுமென இவ்விடத்தில் பல தடவைகள் கூறியுள்ளோம்.**

**இருந்தும் அதுபற்றி எவரும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.**

ஆகவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்ற எங்கள் உயர்கல்வி அமைப்புகள் இதுபற்றிச் சிந்தித்து புத்திஜீவிகள் அணியை உருவாக்கி, அதன்மூலம் எங்களுக்கான தீர்வை அரசாங்கத்திடம் கேட்டு – வலியுறுத்திப் பெற வேண்டும்.

இதைவிடுத்து நம் அரசியல்வாதிகள் பார்ப்பார்கள் என வாழாதிருந்துவிட்டால், நிலைமை மிகவும் மோசமாகிவிடும்.

### அநீதி ஏற்படக்கூடாது என்பதனாலேயே

## புத்தாண்டுக்குப் பின் உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனு கோருகிறோம் - நளின் பண்டார

எந்தத் தேர்தலுக்கும் முகம்கொடுப்பதற்கு நாங்கள் பின்வாங்கியதில்லை. தேர்தல் பிரசார காலப்பகுதி யாருக்கும் அநீதி ஏற்படக் கூடாது என்பதனாலே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் வேட்புமனு கோருமாறு கேட்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு எதிர்க்கட்சி எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்திருப்பது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எந்தவொரு தேர்தலுக்கும் நாங்கள் அச்சப்பட்டதில்லை. ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் தோல்வியடைந்தபோதும் அதன் பிறகு மிகக் குறுகிய காலத்தில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலுக்கு நாங்கள் முகம் கொடுத்தோம். ஜனநாயக முறையில் இடம்பெறும் எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் முகம்கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் விரைவாக நடத்துமாறு நாங்கள் ஆரம்பத்திலிருந்து தெரிவித்து வந்தோம்.

ஆனால் அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தயாராகும் காலப்பகுதி பொருத்தம் இல்லாமல் இருக்கிறது.

ஏப்ரல் மார்தம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் தேர்தல் பிரசாரப் பணிகளை முறையாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

அதேநேரம் இந்தக் காலப்பகுதியில் தேர்தலை நடத்துவதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. குறிப்பாக வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மறுநாள் தொடக்கம் மார்ச் 21ஆம் திகதிவரை வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெறவிருக்கிறது.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இந்த மாதம் வேட்புமனு கோரினால், வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பூரணமாகக் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது.

அதேபோன்று குழு நிலை விவாதம் எதிர்க்கட்சியினால் முனெடுக்கக் கூடியதாகும். அதனால் தேர்தலை ஏப்ரல் மாதம் ஆரம்பத்தில் நடத்தினாலும் தேர்தல் பிரசாரக் காலப்பகுதி வரவு செலவுத் திட்ட விவாத காலப்பகுதியிலேயே இடம் பெறப்போகிறது.

அதேநேரம் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் இடம்பெறும்போது அது பரீட்சை எழுதும் மாணவர்களுக்குப் பாதிப்பாக அமைந்துவிடும்.

அதே நேரம் தமிழ்-சிங்களப் புத்தாண்டு காலப்பகுதியில் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அது அனைவருக்கும் பாதிப்பாக அமைந்துவிடும்.

அதனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு கோரலை தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பிறகு கோருமாறு நாங்கள் கேட்கிறோம். அவ்வாறு இல்லாமல் எந்தத் தேர்தலுக்கும் முகம் கொடுப்பதற்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம் என்றார். (ம-7)

## புதுக்குடியிருப்பில் கசிப்புடன் மூன்று சந்தேக நபர்கள் கைது

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் விற்பனைக்குத் தயாராக இருந்த கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் கசிப்பை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியிலுள்ள கோயில் குளக்கட்டுப் பின் பகுதியில் சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாக ஒட்டுசுட்டான் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையில் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த அதே பகுதியில் உடமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் 37, 36,29 வயதுடைய மூவர் கைது செய்யப்பட்டனர். மேலும் ஒரு சந்தேக நபர் தப்பியோடியுள்ளார்.

அத்தோடு தப்பியோடிய பிரதான சந்தேகநபர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-7,299)

## கடவுச்சீட்டுக்களை ஒப்படைக்குமாறு

### இராணுவ வீரர்களுக்குப் பணிப்பு

இராணுவ மேஜர் பதவிக்குக் கீழுள்ள அனைத்து இராணுவ வீரர்களும் தங்களது கடவுச்சீட்டுக்களை அந்தந்த படைப்பிரிவுகளிடம் ஒப்படைக்குமாறு இலங்கை இராணுவம் பணிப்புரை விடுத்துள்ளது.

வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் உத்தியோகபூர்வ விடயங்களுக்காகக் கடவுச்சீட்டுப் பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் நிர்வாக நோக்கங்களுக்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்துள்ளார். (ம-7)

## கடற்படை சிப்பாய் துப்பாக்கியுடன் கைது

இலங்கைக் கடற்படை மற்றும் குளியாப்பிட்டியப் பொலிஸார் இணைந்து நேற்று அதிகாலை இலுகேனப் பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது ரி-56 ரகத் துப்பாக்கியுடன் கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலிகேன, கல்பொல காலனியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் சந்தேகநபர் பொறுப்பேற்றிருந்த கொழும்புத் துறைமுகத்தின் ரன்வல முகாமில் உள்ள ஆயுதக் களஞ்சியத்திலிருந்து 2021 இல் காணாமல் போன குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக வெலிசரக் கடற்படைத்தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட குறித்த சிப்பாய், மேலதிக விசாரணைகளுக்காகக் குளியாப்பிட்டியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-7)

## புதையல் தோண்டிய நால்வர் பதுளையில் கைது

(பதுளை)

பதுளையில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை வேவெல்ஹின்ன பலகொல்லப் பகுதியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் புதையல் தோண்டுவதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 21 முதல் 50 வயதுக்கு இடைப்பட்ட தம்புல்ல, வேவெல்ஹின்ன, பலகொல்ல பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை பதுளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல், அரிசிக்கான நிர்ணய விலை வழங்கப்பட்டுள்ளது

## கிளிநொச்சியில் பிரதமர் தெரிவிப்பு



(கண்டாவளை)

விவசாயிகளும் நுகர்வோரும் பாதிக்காத வகையில் நெல், அரிசிக்கான உத்தரவாத விலை வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பிரதமர் நேற்று பிற்பகல் கண்டாவளை பிரதேச பொது அமைப்புகள் ஏற்பாடு செய்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்தார்

தொடர்ந்து குறிப்பிடுகையில் பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு-செலவுத் திட்டமானது நாட்டில் உள்ள சகலரும் பயனடையக் கூடிய ஒரு வரவு-செலவு திட்டமாக அமைந்துள்ளது.

கல்வியை எடுத்துக் கொண்டால் தற்போது பாடசாலைகளில் வகுப்பறைகள் இல்லை ஆசிரியர் பற்றாக் குறை என பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

எதிர்காலத்தில் கல்வியை அபிவிருத்தி செய்ய பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளது. இந்த அரசாங்கமானது அண்மையில் நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்கியுள்ளது.

அதேநேரம் நுகர்வோர்களை பாதிக்காத வகையில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இந்த நாட்டிலே விவசாயிகளும் நுகர்வோரும் பாதிக்காத வகையில் நெல்லுக்கான உத்தரவாதவிலையும் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். குறித்த சந்திப்பில் கிராம மட்ட பொது அமைப்புகள் தேசிய மக்கள் சக்தியினுடைய மாவட்ட மற்றும் பிரதேச அமைப்பாளர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (6-8-315)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பீர்க்கங்காய்

**Botanical name- Luffa acutangula**
**Family- CuCurbitaceae**
**Engl-Vegetable gourd**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஓராண்டு வளரக்கூடிய ஏறு கொடியாகும். மருத்துவ முக்கியத்துவமுடைய பீர்க்கு இதன் காய், இலை அனைத்தும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

இதைவிட மரக்கறி வகையாகவும் பயிரிடப்படுகின்றது. இதில் இரண்டு வகை உண்டு. கறுப்பு விதைகளைக் கொண்ட பீர்க்கங்காய் மிகவும் கசப்பானது. இது பேய்ப்பீர்க்கு என அழைக்கப்படும். இது மருத்துவத்தில் வெளிப் பிரயோகமாக பயன்படுத்தப்படும். இதன் தாவரவியற் பெயர் Luffa amara என அழைக்கப்படும். சாதாரண பீர்க்கின் உலர்ந்த கனியின் வலை வடிவ அமைப்பு (Fibrous netting) எமது தோலை உராய்ந்து அழுக்குகளை அகற்ற பயன்படுத்தப் படுகின்றது. (Skin Scrub) இதன் பிஞ்சுகளும், காய்களும் மரக்கறியாக பயன்படுத்தப்படுகிறது.

பீர்க்கங்காய் உடலிற்கு ஏராளமான ஆரோக்கிய நன்மைகளைக் கொடுக்கின்றது. உடல் எடையை குறைக்கக் கூடியது. தாராளமாக பீர்க்கங்காயை உணவில் சேர்த்துக் கொண்டு வர உடல் எடையைக் குறைத்து தோலை மிருதுவாகவும், ஆரோக்கியமாகவும் பேணக் கூடியது. பீர்க்கங்காயில் உள்ள நீர்ச்சத்தானது உடல் எடையைக் குறைக்கப் பயன்படுகிறது. இது மிகக் குறைவான கலோரிகளைக் கொண்டகாய், அத்துடன் உடலுக்குத்தேவையான அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள் உயிர்ச்சத்து C, துத்தநாகச்சத்து, இரும்புச் சத்து, றைபோபிளேவின், மகனீசியம், தயமின் உட்பட்ட அனைத்துச் சத்துக்களும் இதில் அதிகமாக காணப்படுகிறது. பீர்க்கங்காயிலுள்ள பெப்ரைட்டுகள், மற்றும் அல்கலொயிட்டுக்கள் இயற்கையான இன்சுலினாக எமது உடம்பில் தொழிற்படுகிறது. அதனால் இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது. அத்துடன் சிறுநீரில் அதிகளவு சீனி வெளியேறுவதையும் கட்டுப்படுத்துகிறது.

இதனால் நீரிழிவு நோயாளிகள் ஒரு நாளைக்கு 100 கிராம் அளவு பீர்க்கங்காயை உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம். பீர்க்கங்காயில் கலோரிகள் மிகக் குறைவாகவும் மேலும் நார்ச் சத்துக்கள் அதிகமாகவும் காணப்படுகிறது. எமது உணவை எடுக்கும் போது பீர்க்கங்காய் சேர்த்து சாப்பிடும் போது அதிலுள்ள நார்ச்சத்தானது உணவின் திருப்தியான தன்மையை ஏற்படுத்தி மேலதிகமான நொறுக்குத்தீனிகள் சாப்பிடுவதையும் தடுக்கிறது. இதனாலும் உடல் எடை குறைந்து, ஈரல் தொற்று, வயிறு சம்பந்தப்பட்ட தொற்றுக்களை மேலும் பீர்க்கங்காயிலுள்ள உயிர்ச்சத்து C, மகனீசியம், இரும்புச்சத்து , றைபோபிளேவின் போன்றவை உடம்பின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்து மேற்படி தொற்றுக்கள் ஏற்படுவதையும் தடுக்கிறது.

உடம்பில் ஏற்படும் ஒவ்வாமையை தாபித்ததை தடுக்கும் ஆற்றலும் பீர்க்கங்காயிற்கு உண்டு. மேலும் அதிலுள்ள இரும்புச்சத்து பாண்டு அதாவது இரத்தச் சோகையை நீக்கக் கூடிய தன்மையையும் ஏற்படுத்தும் சிவப்பு இரத்த அணுக்களை பராமரிக்க இரும்புச்சத்து அவசியம். இவ் சிவப்பு இரத்த அணுக்களை ஒருங்கிணைக்க விற்றமின் B6 அவசியம். இவ் விற்றமின் B6 பீர்க்கங்காயில் காணப்படுகிறது. சரும ஆரோக்கியத்திற்கும் குடலிற்கும் நிறையத் தொடர்பு உண்டு.


குடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் சருமம் ஆரோக்கியமாக இருக்கும். இதனால் வாரத்தில் இரண்டு நாட்களாவது உணவில் சேர்த்துக் கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்ததாகும். இவ்வாறு தொடர்ந்து செய்து கொண்டு வந்தால் சருமம் மட்டுமல்ல குடலும் ஆரோக்கியமாக இருக்கும். முடிந்தால் பீர்க்கங்காய் சூப் தயாரித்தும் பருகலாம்.

மற்றும் பீர்க்கங்காயானது வயிற்றில் அமிலச் சுரப்பு அதிகமாவதைத் தடுத்து வயிற்றுப் புண் வராமல் காக்கும். இதிலிருக்கும் நார்ச்சத்தால் மலச் சிக்கலையும் தீர்க்கக்கூடியது. பிஞ்சு பீர்க்கங்காய் இரண்டும், இரண்டு கைப்பிடியளவு நிலக்கடலை பருப்பையும் எடுத்து பீர்க்கங்காயை தோல் சீவி அளவாக வெட்டி எடுத்து, நிலக்கடலையை வறுத்து எடுத்து ஆறவிட்டு தோல் நீக்கி மிக்ஸியில் பொடித்து வைத்துக் கொண்டு, ஒரு வாணலியை அடுப்பேற்றி சிறிது நல்லெண்ணெய் விட்டு சீரகம் சிறிது மிளகும் சிறியளவு சேர்த்து வதங்கியதும் மிளகாய் கறிவேப்பிலையும் போட்டு வதக்கி பின்பு வெட்டிய பீர்க்கங்காயை போட்டு வதக்கி, தேவையான அளவு மஞ்சள் தூள், கறிமிளகாய்த்தூள். சிறிது உப்பு சேர்த்து வதக்கி பொடித்து வைத்த நிலக்கடலை பொடியையும் சேர்த்து வதக்கி தேவையெனில் நீர்சேர்த்து கொதிப்பித்து மூடி கொதித்ததும் இறக்கி சோற்றுடன் இட்லி, தோசையுடனும் சேர்த்துச் சாப்பிடலாம்.

சித்த மருத்துவத்தில் பீர்கங்காயை உணவு முறையாக பாகப்படுத்தி உட்கொள்ளில் அது யாவருக்கும் மிகுந்த பத்திய உணவாகும்.

இதனை பீர்க்கின் காய்கறி பேதமிலா துண்ப
பார்க்கு ளெவர்க்குமாம் பத்தியக் கறியாம்.

மது அருந்துவதால் ரத்தத்திலுள்ள நச்சுத் தன்மைகளையும் அகற்றும் ஆற்றல் இவ் பீர்க்கங்காயை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்றாக முற்றாத பிஞ்சுக்காய்கள் சிறந்த பலனைக் கொடுக்கக் கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதில் பொதுச்...

நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதுவரை அப்பதவியில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் சுகவீனம் காரணமாகப் பதவியில் தான் தொடர்ந்து இருக்க முடியாது என நேற்றைய கூட்டத்தில் அறிவித்தமையை அடுத்து கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சத்தியலிங்கத்துக்கு அடுத்து கட்சியில் சிரேஷ்ட துணைச் செயலாளராக இருந்த சுமந்திரனைப் பதில் பொதுச் செயலாளராக நியமிப்பது என மத்திய குழு தீர்மானித்தது. (ம-7)

## கட்டுநாயக்க...

கடந்த மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் நபரொருவரைக் கடத்திப் பணத்தைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஏலவே பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இளைஞனின்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## ஆறு மாத...

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த தமிழினி சதீஸ் (வயது-35) என்ற 6 வயதுப் பெண் குழந்தையின் தாயாரே உயிரிழந்தவராவார்.

படுக்கை அறையில் மெழுகுதிரி எரிந்ததில் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60)

## மின்சாரம்...

இணைப்பை ஏற்படுத்த சிறுவன் முற்பட்டவேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7)

## அரச நிறுவனங்...

குறித்து இருதரப்புக் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று 17ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், மார்ச் மாதம் 21ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டமானது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் முன்வைக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. மறுபுறம் இந்த வரவு - செலவுத் திட்டமானது சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## யாழில்...

புஸ்பராணி (வயது-67) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் கடந்த 8ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் 11ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7)

## அநுர அரசின்...

2025ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத் திட்ட உரை இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கடந்த ஜனவரி 09ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஏழு நாட்கள் இடம்பெறவுள்ளது.

அத்துடன், பெப்ரவரி 25ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

வரவு-செலவுத்திட்டக் காலப்பகுதியில் காலை 9.30 மணி முதல் காலை 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், காலை 10.00 மணிமுதல்மாலை 6.00 மணி வரையான காலப்பகுதியில் வரவு-செலவுத் திட்ட விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21 ஆம் திகதிகள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் மாலை 6.00 மணி முதல் மாலை 6.30 மணிவரையான காலப்பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சுமந்...

உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் அலுவலகத்தில் காலை பத்து மணிக்கு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது, நிகழ்ச்சி நிரலிடப்பட்டதன் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கான விடயம் எடுத்துக் கொள்ளப்பட விருந்த போதும், கட்சியின் பதில் பொதுச்செயலாளராகச் செயற்பட்டு வந்த மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பி அப்பதவியில் இருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுவதாக அறிவித்த நிலையில் உடனடியாக அப்பதவி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

கட்சியின் யாப்புக்கு அமைவாக, சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளராக இருந்த சுமந்திரன் அப்பதவிக்கு முன்மொழியப்பட்ட நிலையில் அவரது தரப்பில் எவ்விதமான எதிர்மறையான பிரதிபலிப்புக்களும் செய்யப்படவில்லை.

எனினும் சிவஞானம் சிறீதரன், ஞானமுத்து சிறிநேசன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் அப்பதவிக்கான நியமனத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கட்சியின் மத்திய குழுவிற்கு அப்பதவியை வழங்கு வதற்கான அதிகாரம்இல்லையென்ற தொனிப்பட வாதங்களை முன்வைத்தனர்.

எனினும், அவ்வாதங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்காத நிலையில் மத்தியகுழுவின் பெரும்பான்மையானவர்களின் அங்கீகாரத்துடன் சுமந்திரன் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 5749
D 1 8 8 4 0 9
அத சம்பத D 8 4 0 9
சீட்டிழுப்பு இலக்கம் 0324
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1779
Q 06 21 28 55 Q
Double Chance 36880

மெகா பவர்
திகதி 16/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2097
P 07 16 56 67 71

ජය JAYA
திகதி 2025.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 0017
T 4 7 4 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3991
சீட்டிழுப்பு திகதி 16.02.2025
Q 03 08 58 78
Q
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 1058
மீனம் 05 06 40 61 மீனம்
76637 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.02.2025 வெற்றி வாரம் 457
G 6 8 8 3 3 5
84962
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,246,315.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2723
சீட்டிழுப்பு திகதி 2025.02.16 தினம் ஞாயிற்றுக்கிழமை
14 18 32 74 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,551,235.20
DLB

சனிதா
திகதி 16.02.2025 வெற்றி வாரம் 4884
03 16 62 70 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,634,636.40
ரூ. 100,000/- 59801
DLB

சசிரி
வெற்றி வாரம் 624
சீட்டிழுப்பு திகதி 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 13 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4435
சீட்டிழுப்பு திகதி 16.02.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
06 09 29 61 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.12,177,197.60
214335
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 07 10 20 27 52
1899
16.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.565,507,676.20
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2549
சீட்டிழுப்புத் திகதி : 2025.02.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,092,460.00
21 33 37 50 M
188467
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுமட்டுவாளில் மரக்குற்றிகளை கடத்திய பாரவூர்தி கைப்பற்றப்பட்டது

## சந்தேக நபர் ஒருவர் கைது



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரக்குற்றிகளை சூட்சுமமாகக் கடத்திச் சென்ற பாரவூர்தி ஒன்றை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான வேம்பு,நாவல் மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளையும் கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,30)

## புளொட்...

ராட்சிசபைத் தேர்தலில் தமிழர்கள் தமிழ் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டுமென்ற கோசத்தை முன்னெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று (16) மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்றது.

இதன்போது, உள்ளூராட்சிசபைத் தேர்தல், புதிய அரசியல் தீர்வு விவகாரம் பற்றி ஆராயப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங் கம் வகித்த கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலிலும், தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதிலும் இணக்கப்பாட்டுடன் செயற்படுவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் புளொட் தலைவர் த.சித்தார்த்தனுடனும், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனுடனும் பேச்சு நடத்தியதாக, பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் முறைமை காரணமாக, தனித்தரப்பு ஆட்சியமைப்பதில் சிக்கல், தேசிய மக்கள் சக்தி ஆதரவு நிலை ஆகியவை காரணமாக, முன்னைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி, தேர்தலின் பின்னர் இணைந்து ஆட்சியமைப்பது பற்றி பேச்சு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களை பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், ப.சத்தியலிங்கம் ஆகிய இருவரும் முன்னெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்கள் தமிழக் கட்சிகளுக்கே-தமிழர்கள் தலைவர்களாக உள்ள கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டுமென்ற பிரசாரத்தை முன்னெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அரசியல் தீர்வு விவகாரத்தில் பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஓரணியாக செயற்படுவது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆரம்பித்துள்ள முயற்சி பற்றியும் ஆராயப்பட்டது.

அரசாங்கம் உனடியாக அரசியல் தீர்வு விவகாரத்தை கையிலெடுக்கும் நிலைமை தென்படாததால், இந்த விவகாரத்தில் அவசரம் காட்டாமல், நிலைமையை பொறுத்து தீர்மானம் எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)


வேலைக்கு ஆள் தேவை

வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.

074 179 3394

(C-2282)



உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2281)



மணமகன் தேவை

யாழ். இந்து, 1984 இல் பிறந்த அவுஸ்திரேலியாவில் வசிக்கும் Accountant ஆக தொழில் புரியும் மணமகளுக்கு பட்டம் பெற்ற அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மணமகன் தேவை.

076 249 5401
076 162 4584

(3442)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (3438)

076 825 7716 (ஆகாஸ்)



அகவை 80 இல்

அக மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



திரு. நாகநாதன் சண்முகானந்தன்

(நயினாதீவு)

மணிபல்லவத் தாயின் நல்லருள் பெற்ற நயினை மைந்தன்
நாளும் நல்லதை எண்ணும் நல்லோன்; நற்பண்பாளன்
எண்ணிய கருமம் யாவும் திண்ணியமாய் முடித்தருளும்
ஆற்றலோன் ஆளுமையாளன் ஆபத்பாந்தவன்
கண்ணியம் மிக்கோன் கனவான்
முழு மதிவதனம், மும்மொழிப் புலமை
சொல்லுதல் அறிந்து சொல்லும் சொலவல்லன்
வலம்புரி ஆசிரியராம் அலங்கரித்த செம்மையாளன்
நாகநாதன் சண்முகானந்தன் நல்லகவை எண்பதில்
அமுதவிழாக் கண்டார் அவர் இன்னும்
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

- வலம்புரிக் குடும்பம்







தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும்

கம்பன் விழா - 2025

காலம் : 17.02.2025 இன்று திங்கள் மாலை 5.00 மணி
இடம் : தென்மராட்சிக் கலைமன்றம், சாவகச்சேரி.

மங்கல இசை
நாதஸ்வர இளவல்கள் வி.சித்தார்த்தன், வி. பிரதித்தன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல்
வைத்திய கலாநிதி சு.சி.அருளானந்தம் தம்பதியர்
பேராசிரியர் க. கந்தசாமி தம்பதியர்
கடவுள் வாழ்த்து
திருமதி செந்தூரன் சௌமியா (உதவி அஞ்சல் அதிபர், சாவகச்சேரி)
தலைமையுரை
திரு.க.கனகேஸ்வரன் (அரச அதிபர் - மன்னார்)
தொடக்கவுரை
லயன். வ. ஸ்ரீபிரகாஷ் (அதிபர், குகன் ஸ்ருடியோ)
அஞ்சலியுரை
ஆசிரியர் திரு. ச.மார்க்கண்டு (தென்மராட்சி இலக்கிய அணி)
நிகழ்வு நெறியாள்கை
திரு.சோ.கோகுலன் (தலைவர், தென்மராட்சி இலக்கிய அணி)

பட்டிமண்டபம்

நடுவர் : "கம்பவாரிதி" இ.ஜெயராஜ் அவர்கள்
பொருள் : "இன்றைய அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டவல்ல பெருந்தலைவன்"

| வாலியே! | இராவணனே! | தசரதனே! |
|---|---|---|
| ந.விஜயசுந்தரம் | ஐ.கதிர்காமசேகரன் | தி.வேல்நம்பி |
| த.கருணாகரன் | வே.ஞானசம்பந்தன் | அ.வாசுதேவா |

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொள்வாம்"

அமுதத் தமிழ் பருக! அனைவரும் வருக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.